அடையாள இலக்கம்

H ☐☐☐☐☐☐

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2022

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# அடிப்படை எழுத்தறிவுப் போட்டி

# அதிமேற் பிரிவு

(12 – 14 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணித்தியாலங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

## (அ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து வசனத்தைப் பூர்த்தி செய்க.

**குறிப்பு** : சரியான விடையினைக் கோடிட்ட இடத்தில் எழுதாதவர்களுக்குப் புள்ளிகள் **வழங்கப்படமாட்டாது**

1) நல்லொழுக்கம் உடையவரை எல்லோரும் ____________________.

அ) போற்றுவர் ஆ) மிதிப்பர்

இ) தூற்றுவர் ஈ) ஏசுவர்

2) பரீட்சையிற் சிறப்பாகச் செய்திருந்த ____________________ ஆசிரியர்கள் பாராட்டினார்கள்.

அ) பெற்றோர்களை ஆ) பிரயாணிகளை

இ) மாணவர்களை ஈ) சாரதிகளை

3) திருவள்ளுவர் ____________________ இயற்றினார்.

அ) திருக்குறளுக்கு ஆ) திருக்குறளால்

இ) திருக்குறளை ஈ) திருக்குறளுடன்

4) கடுமையாகப் பெய்த மழையினால் ஏற்பட்ட ____________________ நகருக்குள் புகுந்து பல வீடுகளை அழித்தது.

அ) வெல்லம் ஆ) வெள்ளம்

இ) வெள்ளத்தில் ஈ) வெள்ளத்துடன்

5) சிங்கம் ____________________ வாழும்.

அ) வீட்டில் ஆ) தெருவில்

இ) காட்டில் ஈ) நாட்டில்

(5 புள்ளிகள்)

**(ஆ) முதல் வாக்கியத்தில் கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட வினைச்சொல்லைஅதன் கீழுள்ள வாக்கியத்தின் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றி தரப்பட்ட இடைவெளிக்குள் எழுதுக.**

1. நான் இப்பொழுது தமிழ் **கற்கிறேன்**.
   என் தோழியும் இப்பொழுது தமிழ் ____________________.

2. குழந்தை பாயில் **தவழ்ந்தது**.
   இப்பொழுது குழந்தை பாயில் ____________________.

3. புறாக்கள் கூட்டமாக பறந்து **சென்றன**.
   நாளையும் புறாக்கள் கூட்டமாக பறந்து ____________________.

4. நான் சென்ற வருடம் இரண்டாம் வகுப்பிலே **படித்தேன்**.
   அடுத்த வருடம் நான் நான்காம் வகுப்பில் ____________________.

5. அம்மா எப்போதும் பூச்செடிகளுக்கு தண்ணீர் **ஊற்றுவார்**.
   நேற்றும் அதேபோலவே அம்மா பூச்செடிகளுக்கு தண்ணீர்
   ____________________.

(10 புள்ளிகள்)

**(இ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1. ஆறு + மணல் = ____________________
2. தமிழ் + இசை = ____________________
3. அன்பு + இல்லை = ____________________
4. முன் + பகல் = ____________________
5. சொல் + போர் = ____________________

(10 புள்ளிகள்)

## (ஈ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1. வாழைமரம் ____________ + ____________
2. வருமானவரி ____________ + ____________
3. போர்க்காலம் ____________ + ____________
4. கண்ணிமை ____________ + ____________
5. நாட்காட்டி ____________ + ____________

(10 புள்ளிகள்)

## (உ) கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை எழுதி வசனத்தைப் பூர்த்தி செய்க.

1. இரவில் ____________ ஒளிர்விடும் நட்சத்திரங்கள் பலவற்றைப் பார்த்து மகிழலாம்.
2. மழையின்மையால் ____________ எல்லாம் வாடி வதங்கிக் காணப்பட்டன.
3. பூந்தோட்டத்தில் இருந்த பூக்களின் அழகு பலரது கவனத்தையும் ____________ .
4. கோமாளியின் வேடிக்கை அனைவரையும் வயிறு ____________ சிரிக்க வைத்தது.
5. வெள்ளத்தில் சிக்கியவர்களை ____________ இராணுவத்தினர் அழைக்கப்பட்டனர்.
6. பாகற்காய் ____________ இருந்தாலும் உணவில் சேர்த்துக் கொள்வது உடலுக்கு நல்லது.
7. இயந்திரக் கோளாறு ஏற்பட்டதால் கப்பல் ஒன்று கடலில் ____________ .
8. தமிழர்கள் மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் ஆகிய பழங்களை ____________ என்பர்.

9. பிள்ளைகள் ____________________ மனம் கோணாமல் நடந்து கொள்ள வேண்டும்.

10. எமது ____________________ சிறப்புகளை அறியவிரும்புபவர்கள் தமிழ் இலக்கியங்களைப் படிக்க வேண்டும்.

(20 புள்ளிகள்)

## (ஊ) எதிர்ப் பொருள் தரும் சொல்லை எழுதுக.

(1) இளமை ____________________

(2) குழப்பம் ____________________

(3) சுறுசுறுப்பு ____________________

(4) பகல் ____________________

(5) வளர்பிறை ____________________

(5 புள்ளிகள்)

## (எ) ஒத்த கருத்துள்ள சொல்லை எழுதுக.

1) காடு - ____________________

2) சந்திரன் - ____________________

3) நெருப்பு - ____________________

4) அரசன் - ____________________

5) அன்பு - ____________________

(5 புள்ளிகள்)

## (ஏ) பின்வரும் ஒருமைச் சொற்களைப் பன்மைச் சொற்களாக்குக.

**உதாரணம்: பறவை – <u>பறவைகள்</u>**

1) அது - ____________________
2) பல் - ____________________
3) சிங்கம் - ____________________
4) பசு - ____________________
5) நடந்தான் - ____________________

(10 புள்ளிகள்)

## (ஐ) கீழே தரப்பட்ட தொழில் செய்பவர்களுக்குரிய தொழிற் பெயர்களை கோடிட்டு இணைக்கவும்.

| | | |
|---|---|---|
| 1) | வேட்டையாடிப் பிழைப்பவர் | பாகர் |
| 2) | யானையைப் பழக்குபவர் | ஓட்டுனர் |
| 3) | பேரூந்து ஓட்டுபவர் | சிற்பி |
| 4) | சிலையைச் செதுக்குபவர் | வலைஞர் |
| 5) | மீன் பிடிப்பிப்பவர் | வேடர் |

(5 புள்ளிகள்)

## (ஓ) கீழே தரப்பட்டவற்றில் மிகவும் பொருத்தமானவற்றைக் கோடிட்டு இணைக்கவும்.

| | | |
|---|---|---|
| 1) | சித்திரை | கோடை |
| 2) | வாகனம் | எரிபொருள் |
| 3) | கர்ணன் | வரட்சி |
| 4) | வெயில் | பாட்டு |
| 5) | குயில் | வருடப்பிறப்பு |

(5 புள்ளிகள்)

ஓ) குறைந்தது 40 சொற்களில் கீழே தரப்பட்ட தலைப்பைப் பற்றி எழுதுக.

(புள்ளிகள்: 15)

நான் விரும்பிக் கற்கும் பாடம்